RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1812

OPEN ACCESS

# 'சங்கதி'யில் தலித் பெண் தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள்

**இரா. சித்திரவேலு** [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத் துறை, மருதுபாண்டியர் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தஞ்சாவூர்-613403, தமிழ்நாடு, இந்தியா.

# Economic Problems of Dalit Women Workers

**R. Chitravelu** [a, *]

[a] Department of Tamil, Maruthupandiyar College, (Affiliated to Bharathidasan University), Thanjavur-613403, Tamil Nadu, India

* Corresponding Author: mohanachitravelu24@gmail.com

Received: 23-08-2022
Revised: 03-11-2022
Accepted: 14-11-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

We differentiate humans as two genders male and female but they are united physically and morally. of these two men is always considered as superior whereas women as inferior. This concept of masculinity is created by men and many feminists arise to break this concept. Feminist principles are divided into many categories such as moderation, equality and extremism due to differences. Black feminist arise due to racial differences and Dalit feminism is about the liberation of Dalit women who are enslaved in the name of caste. From birth to death, Dalit women live as slaves, shopkeepers, oppressed and marginalized in socio-economic conditions. They have no land, education is denied and they live as wage laborers. They are insulted, exploited, and thrown away in the name of caste. Economically these women face many problems. The aim of this article is to examine the plight of Dalit women workers who are oppressed and enslaved even after 75 years of independence.

**Keywords:** Women, Economic, Workers, Physically and Morally

## முன்னுரை

அண்மைக் காலமாய் வீரியத்தோடு கிளம்பி வரும் தலித் இலக்கியங்கள், தலித் விடுதலையை முன்வைத்தே எழுச்சி பெற்றுள்ளன. அவற்றுள் பாமா என்னும் தலித் இனப்படைப்பாளியால் படைக்கப்பட்டு வரும் இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கி, அவற்றின்வழி வெளிப்படும் தலித் விடுதலைச் சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது இன்றிமையாததாகும். மேலும் இப்படைப்பாளி தாம் வாழும் சமூகத்தின் மீது கொண்டுள்ள நாட்டமும் பற்றும் எத்தகையன என்பதை அவர்தம் படைப்புகள்வழி ஆய்வு மேற்கொள்வதும் இன்றைய தேவையாகிவிடுகிறது. பாமாவின் படைப்புகள் பற்றிய மதிப்பீடுகள் பல்வேறு திறனாய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. 'பாமாவின் படைப்புக்களில் பெண்ணியம்', 'பாமாவின் கருக்கு, சங்கதி என்ற நாவலில் தலித் கதையாடல்', 'பெண்ணிய அணுகுமுறைகளும் பெண்களும்', 'பாமாவின் சிறுகதைகளில் தலித் சமூகம்', 'ஒரு தாத்தாவும் எருமையும் - ஓர் ஆய்வு' போன்ற தலைப்புகளில் எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி. பட்டத்திற்காக பாமாவின் படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகப் பாமாவின் 'சங்கதி' நாவல் தலித் பெண் தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

## தலித் வரையறை

தலித் என்ற சொல் இது 'தல்' என்ற எபிரேய மூலச்சொல்லிலிருந்து பிறந்தது. பைபிளை இந்தியில் மொழியாக்கம் செய்த போது எடுத்தாளப்பட்ட சொல். இந்த 'தல்' என்ற சொல்லைத் தமிழ் பைபிளில் 'ஏழைகள்' என்றே மொழியாக்கம் செய்துள்ளனர். "தமிழகத்தில் திராவிட இயக்கங்களும் பொதுவுடைமை இயக்கங்களும் உருவான நேரத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்த பண்டைய திராவிட இனத்தினரை பஞ்சமன் என்ற சொல் தலித் மக்களிடையே மிகவும் இழிவாகக் கருதப்பட்ட நேரத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அட்டவணை இனத்தவர் என்றும், ஆந்திராவில் ஆதிஆந்திரர் என்றும், கர்நாடகாவில் ஆதிகர்நாடகர் என்றும், தமிழகத்தில் ஆதிதிராவிடர் என்ற வழக்கம் வழங்கலாயிற்று" (இதயவேந்தன், 2009) என்று குறிப்பிடுகிறார்.

தலித் என்பவர் யார் என்ற கேள்விக்கு கெய்ல் ஓம்வெத், "தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், புதிய பௌத்தர்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும் மதத்தின் பெயராலும் பொருளாதார ரீதியாகவும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துகள்தான்" என்று விடை கூறுகிறார் (Ravikumar, 1994).

தலித் என்ற மராத்திச் சொல்லுக்கு 'உடைந்து போனவர்கள்' என்று பொருள். எழுபதுகளில் மராட்டியத்தில் வசிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களும், இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மக்களில் சிலரும் தங்களைத் தலித் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர். பின்னர், இந்தப் பெயர் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலைத்துவிட்டது என்று பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் கூறுகிறது.

ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் தம் உரிமைகளும் சுதந்திரமும் மறுக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். தலித் பெண்கள், தலித்துகளிலும் தலித்துகளாய் இருக்கிறார்கள் என்பதை நடைமுறை வாழ்க்கையில் 'சங்கதி', 'பிறகு', 'உப்புவயல்' போன்ற தலித் நாவல்கள் விளங்கச் செய்திருக்கின்றன. தம்மை அடிமைப்படுத்தும் அரசியல், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றினின்று விடுவித்துக் கொண்டு ஒரு சுதந்திரமான வாழ்க்கையை நாடி தலித் பெண்கள் காலங்காலமாய் போராடிக் கொண்டிருப்பதையும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பொருளாதாரப் பிரச்சினைகளால் எழும் துன்பங்கள் பல்வேறுப்பட்டச் சூழல்களில் அவர்கள் எதிர்க்கொள்ளச் செய்கின்றன

## தலித்தியமும் பெண்ணியமும்

தலித்தியம், இன முன்னேற்றத்திற்கான இலக்கைக் கொண்டு இந்துக்களையும், இந்துத் தத்துவத்தையும், மேல்சாதி கிறித்துவர்களையும், பாதிரிமார்களையும் கடுமையாக எதிர்ப்பது ஆகும். பெண்ணியம், அடிமை நிலையில் இருந்து பெண்களை மீட்டும் போராட்டத்தை இலக்காகக் கொண்டுள்ளது. தீண்டாமை - மதம், சாதி ஆகியவற்றின் பெயரால், பிறப்பின் அடிப்படையில் தோன்றியது. பெண்ணடிமை பாலின் அடிப்படையில், பிறப்பு முதல் தோற்றம் பெறுவதாகும். இந்தியாவில், தற்செயலாகத் தலித்தாகப் பிறக்க நேரிடுகிற பெண், பால் ரீதியாகத் தலித் ஆடவனைக் காட்டிலும் தாழ்ந்தவள் எனவும், மத ரீதியில் இழிந்தவள் எனவும் அடையாளப்படுத்தப்படுகிறாள். சமூக ரீதியாக, ஏற்றத்தாழ்வுள்ள உறவு நிலைகளையும், அதிகார உறவுகளையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மணித்துளியும் சந்தித்துக் கொண்டிருக்கின்றவர்கள் தலித் பெண் தொழிலாளர்கள்.

"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து, அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" என்கிறார் (Rangammal & Vasuki, 2000). பெண்ணியம் என்பது, "பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை மேற்கொள்ளும் இயக்கம்" என்கிறார் (Rangammal & Vasuki, 2000).

## தலித் பெண்

பொருளாதார ரீதியாக, உழைப்புச் சுரண்டலில் சிக்குண்டு உழைப்போடு மட்டுமே உறவாடி, தங்களின் முகவரிகளை இழந்து, கடைநிலை ஊழியர்களாக்கப்பட்டிருக்கின்றார்கள். தலித் பெண்கள் அரசியல் ரீதியாக, மனிதர்களாகக் கருதப்படாமல், வாக்கு வாங்கும் சந்தை இடமாக மாற்றப்பட்டவர்கள். இவர்கள் தங்கள் மீதும் தங்கள் உடல் மீதும் அதிகாரம் இழந்தவர்கள். தங்களின் நிலை குறித்து முடிவெடுக்க இயலாதபடிக்கு மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள். கலாச்சார ரீதியாக, தீண்டத்தகாதவள், கிராமத்துவாசி என்றெல்லாம் முத்திரைக் குத்தித் தள்ளி வைக்கப்பட்டவள் ஒரு தலித் பெண்.

ஆசிரியர் பாமா, தனக்கு நேர்ந்த துன்பங்களை எடுத்துக் கூறும்போது, "தலித்தா இருக்கிறது ஒரு கஷ்டம், அதுலயுந் தலித்துப் பொம்பளையா இருக்கிறது பெரிய கஷ்டம், இன்னுஞ் சொல்லப்போனா, வாக்கப்படாத தலித்துப் பொம்பளையா தனியாளா சீவிக்கிரது ரொம்பப் பெரிய கஷ்டமுன்னு ஒணந்துக்கிட்டேன்" என்று கூறுமிடங்களில் தலித்தியமும் பெண்ணியமும் இணைந்து பாமாவில் வாழ்க்கையில் ஏற்படுத்திய இன்னல்களை அறிந்து கொள்ளமுடிகிறது (Bama, 2022).

## தலித்துக்களின் பொருளாதாரம்

இந்தியாவின் முதுகெலும்பான கிராமங்களில் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து கொண்டிருப்பது தலித் மக்கள் ஆவர். "இந்திய மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினராய் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்கள் இன்று வரை இந்தியக் குடியுரிமை பெற்ற சமூக அடிமைகளாகவே நடத்தப்பட்டு வருகின்றனர்" என்று 'புதிய கோடாங்கி'களில் வேலுச்சாமி குறிப்பிடுகிறார். வல்லரசு பெற்ற நாடுகளோடு போட்டிப்போட்டுக் கொண்டு "கழனி முதல் கணினி வரை இந்தியா அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம், போக்குவரத்து போன்ற துறைகளின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்து இந்தியா தன்னிறைவு நிலையை அடைந்தபோதும் பெரும்பான்மையான கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தில் இன்றும் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் எதுவும் அடையவில்லை என்ற கருத்து, உலகச் செல்வந்தர்கள் பட்டியலில் இந்திய செல்வந்தர்கள் இடம்பெற்றிருந்தாலும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் இந்தியர்களின் வாழ்க்கை நிலை, குறிப்பாகத் தலித் மக்களின் வாழ்க்கை நிலை அபாயகரமாக உள்ளது" என்று ரெங்கம்மாளும் வாசுகியும் குறிப்பிடுகின்றனர் (Rangammal & Vasuki, 2000).

## ஆதிக்கச் சாதியப்போக்கு

தலித் பெண்கள் அன்றாடம் வேலைக்குச் செல்ல வேண்டுமானால் உயர்சாதித் தெருவில் உள்ள மேஸ்திரியிடம்தான் வேலை கேட்டு செல்ல வேண்டும். அப்படியே அப்பெண்கள் வேலைக்குச் சென்றாலும் அவர்கள் அன்றையக் கூலி பெறுவதில் பெரும் துன்பத்தை அடைந்துள்ளதை பாமா, "எங்க தெருவுகள்ள இருந்து பொம்பகளைகள வேலைக்கு அமத்திட்டுப்போயி வேலை செஞ்சுட்டு, சாயந்தரம் கூலி வாங்கியாந்துப் பிரிச்சுக் குடுக்கனும், சம்சாரிகள்ளாம் மேச்சாதிங்கரதுனால, அவுக வீடுக எங்க தெருவுல ஈரந்து ரொம்பத்தூரம் தள்ளி இருக்கும் வேல வெசாரிக்கப் போனாலும், செஞ்ச வேலைக்குக் கூலி வாங்கப் போனாலும் பத்துத் தடவ நாயா அலயவப்பானுக" என்று குறிப்பிடுகின்றார் (Bama, 2022). தலித் பெண்கள் உழைத்தவுடன் கூலிப் பெறுவதற்கு பலமுறை அலைந்து திரிந்து வாங்க வேண்டிய நிலை உள்ளது. வேலை கிடைத்தாலும் கூலிக் கிடைப்பதில் பெரும் துன்பம் அடைந்ததை நாம் காணமுடிகிறது. இதே கருத்தை ஸ்ரீதர கணேசன் தனது 'உப்புவயல்' நாவலில் "உழைத்தக் கூலியை கையில் கொடுக்காமல் காலம் கடத்தி ஒருநாள் கொடுக்கும்போது கைகளைப் பிடித்துக் கொடுத்துவிட்டு கற்பைக் களங்கப்படுத்துவார்கள்" என்று பதிவுச் செய்துள்ளார் (Ravikumar, 1996).

## உழைப்புச் சுரண்டல்

பொருளாதார நிலையில் பின்தங்கியிருப்பதற்குக் காரணம், அவர்களின் உடலுழைப்பும் உரிமைகளும் சுரண்டப்படுவதே. இந்நிலையில் அவர்கள் தங்களுக்குத் தாங்களே முடிவெடுத்துக் கொள்ளக்கூடிய அரசியல் பலமின்றி விளங்குகின்றனர். இங்கு அரசியல் என்பது குறிப்பிட்ட (தலித்) சமுதாயத்தின் நலனை விரும்பியும் மற்றும் அவர்களின் முடிவெடுக்கும் அதிகாரத்தை விளக்கியும் நிற்கிறது. குறிப்பாக தலித் பெண்களின் உடலுழைப்பானது சுரண்டப்படுவதை பாமா பதிவு செய்துள்ளார். "பொம்பளைகளுக்கு எந்த வேலைக்குமே கொறச் சம்பளந்தான். ஒரே மாதிரி வேல செஞ்சாக்கூட குறைச்ச கூலிதான். வெறகு கட்லகூட ஆம்பள கெட்டுனா அஞ்சாறு ரூபா கூடத்தான். பொம்பளைக் கெட்டயே ஆம்பள கொண்டு போயி வித்தாம்னா அதற்கு உண்டான வெலதான்" என்று ஆண் பெண் ஒரே வேலையை செய்தாலும்கூட கூலிப் பெறுவதில் ஏற்றத்தாழ்வு நிலவுவதையும், அங்கு தலித் பெண்களின் உழைப்புச் சுரண்டப்படுவதையும் நாம் அறியமுடிகிறது (Bama, 2022). உப்பளத் தொழிலாளர்களின் உழைப்பு அவர்களின் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் போதுமானதாக இல்லை. "விடாதே விடாதே என்று வேணா வெயில்லே ஓடி ஓடி உப்புப் பெட்டி சுமந்தால் பிட்டி எலும்பு உடைஞ்சுபோன மாதிரி வலிக்கும், சோர்ந்து போய் வீடு திரும்பும் போது 10 ரூபாய் காசு கிடைக்கும்" என்று தலித் பெண்களின் உழைப்புச் சுரண்டலின் நிலையை ஸ்ரீதர கணேசன் தனது நாவலில் அழுத்தமாக பாமாவைப் போன்று பதிவுச் செய்துள்ளார். இதனால் தலித் பெண்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு நிகழ்வதை நாம் பார்க்க முடிகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு இந்த நன்றிக்கெட்ட சமூகத்தால் உண்டானது. அவர்களின் உழைப்பைச் சுரண்டி கொழுத்துக் கொண்டே அவர்களைத் தீண்டப்படாதவர்கள் என ஒதுக்கி வைக்கும் துரோகத்தை, இச்சமூகம் இன்றளவும் செய்து கொண்டுதானே இருக்கிறது (Ravikumar, 1996).

## பூப்புச் சடங்கு

பெண் பிள்ளைகள் பூப்பு எய்தும் (Attain puberty) நிலையில் தமிழகத்தில் எல்லா இனத்தவர்களிடம் பூப்புச் சடங்கு முறைகள் ஆதிக்காலம் தொட்டு நடத்தப்பெற்று வருகின்றன. பொருளாதாரப் பிரச்சினையின் காரணமாகத் தலித் பெண்களுக்கு இச்சடங்கு முறைகள் எட்டாக் கனியாக இருப்பதை பாமா, "எதுக்கு பாட்டி மரியம்மாளுக்கு சடங்கு வைக்காம உட்டுட்டீங்கன்னு நான் கேட்டேன். சடங்கு வைக்குறதுன்னா சும்மாவா கைல நாலு துட்டு இருந்தா எல்லாம் வைக்கலாம். எட்டாவது நாளே குச்சுல புடுங்கிக் போட்டுட்டு வேலைக்கு கெளம்பிட்டா" வெள்ளையம்மா பாத்திரப்படைப்பு மூலம் குறிப்பிடுகிறார். இதன் மூலம் தலித் பெண்களின் வாழ்க்கையில் நடக்கும் நிதர்சன உண்மையாகப் பதிவுச் செய்துள்ளார். வறுமையின் காரணமாகத் தலித் பெண்களுக்கு மற்ற சாதிப் பெண்களுக்கு நடப்பது போன்று இவர்களுக்கு சடங்கு முறைகள் நடைபெறுவது கிடையாது (Bama, 2022).

## கிணறு தோண்டும் வேலை

தலித் பெண்கள் தன் குழந்தைகளை வளர்ப்பதற்காக தன் உயிரைக்கூட பணையம் வைத்து வேலைக்குச் செல்கின்றனர் என்பதை மரியம்மா கதாபத்திரம் மூலம் நாம் உணரமுடிகிறது. "ஒருநாள் மரியம்மா கிணறு வெட்டும் வேலைக்கு போகும் போது கிணத்துக்குள்ள இறங்கி மண் கூடையை சுமந்து மேலே தூக்கி வரும் போது கிணற்றில் தவறி விழுந்து தனது முதுகெலும்பு உடைந்து ஆறு மாதமாக படுக்கையில் இருந்தாள்" என்பதை பாமா குறிப்பிடுகின்றார். பெண்கள் கணவனுக்காகவும் குழந்தைகளுக்காகவும் துன்பம் என்றும் பாராமல் உழைக்க நேரிடுகிறது. இதனை, "கெணத்து வேலைல சம்பளம் ரொம்பக் குடுக்காகன்னு மரியம்மா கெணத்து வேலைக்குப் போனா. எளவட்டங்க, கொமரி குட்டச்சிகத்தான் அந்த வேலைக்குப் போக முடியும். கஸ்டமான வேலன்னாலும் ஏதோ கொஞ்சம் துட்டு உண்டெனாக் கெடச்சா வகுராற கஞ்சு குடிக்கலாமுன்னு இந்த வேலைக்குப் போவாக . . ." "ஒரு நாளு அப்படித்தான் மரியம்மா கல்லுக்கூட தூக்கிக்கிட்டு மேலவரும்போது கல்லுத் தடுக்கி, மேல இருந்து கூடையோட கீழ விழுந்துட்டா, அம்புட்டு ஆழக்கிணத்துல உழுந்து அவா பொழச்சதே மறு

பொழப்பு. தலைலை அம்புட்டு அடி இல்ல, ஆனா ஒடம்புலருந்து எலும்பு பூரா நொறுங்கிப் போச்சு" =என்று தலித் பெண்கள் கொஞ்சம் அதிகமான கூலிக்கு ஆசைப்பட்டு உயிரைக்கூட விடும் நிலை அப்பெண்களிடம் காணப்படுவதை பாமா பதிவுச் செய்துள்ளார். தனது உயிரையும் பெரிதாக நினைக்காமல் தலித் பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலையை அறியமுடிகிறது (Bama, 2022).

## விவசாயக் கூலி

வாழ்க்கையில் தலித் பெண்கள் தம் ஒவ்வொரு நாளையும் கடத்துவது என்பது சிக்கல்கள் நிறைந்ததாகவே உள்ளது. காரணம் அவர்களுக்கு இந்த வேலைதான் நிரந்தரம் என்பது இல்லை. கிடைத்த வேலையைச் செய்து அதில் பெறும் கூலியைக் கொண்டு வாழ்க்கை நடத்தியதனைக் "களை எடுக்க, கதிரறுக்கப் போனாக வேலை கெடைக்காத நாளை மலங்காட்டுக்கு வெறுக்குப் போயி வெறகு கொண்டாந்து வித்து கஞ்சி காச்சுனாக" என்பது ஆசிரியர் தலித் பெண்களின் அன்றாட வாழ்க்கை நிலையை எடுத்துக்கூறி உள்ளார். இஃது அச்சமூக மக்களின் வாழ்வியல் நிலையினையும், சூழ்நிலையினையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது (Bama, 2022).

## ஊட்டச்சத்து குறைவு

பொருளாதாரப் பிரச்சினைகளால் தலித் பெண்களுக்கு சரியான ஊட்டச்சத்து உணவு கிடைக்காததாலும் வயதுக்கு மீறிய உழைப்பைச் செய்வதாலும், அப்பெண்கள் இயற்கையின்பால் சராசரியான வயதில் எய்த வேண்டிய பூப்படைதல் (Puberty) நிகழ்வு நடவாமல் காலம் கடந்தும் நடவாமை என்கிற அவலநிலையும் ஏற்படுகின்றன. இதனை "மரியம்மாவுக்கு இம்புட்டு வயசாகியும் இன்னும் மொலையும் வல்ல ஒண்ணும் வல்ல, அவா சடங்காகாமே இருக்குறத வச்சு கண்டமானிக்கா பேசுராளுக. அந்தப் பிள்ளை வயசுக்கு மீறன வேல செஞ்சே சுருண்டு போனா பாவம்" என்று தலித் பெண்களின் நிலையாக வெள்ளையம்மா பாத்திரத்தின் மூலம் உணரச் செய்துள்ளார் ஆசிரியர். உலக நியதியாகப் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படும் பூப்படைதல் நிகழ்வு பொருளாதாரச் சிக்கல்களினால் மாற்றமடைகிறது என்பதை அறிவியல் ரீதியில் பொருத்திப் பார்க்கின்றார் (Bama, 2022)

## வாழ்வில் மகிழ்ச்சியில்லை

பெரும்பாலான தலித் பெண்களிடம் மகிழ்ச்சி இல்லாமல் போனதுக்குக் காரணம் பொருளாதாரப் பிரச்சினை. 'சங்கதி'யில் வரக்கூடிய மையக்கண்ணி என்ற பெண் தீப்பெட்டி தொழிற்சாலைக்கு வேலைக்குப் போகிறாள். வாரச் சம்பளம். ஒருநாள் அவள் எல்லா பிள்ளைகளும் ஐஸ்கிரீம் வாங்கி சாப்பிடுவதைப் பார்த்து அவளும் வாங்கி சாப்பிட்டாள். ஆனால், "பெரீம இன்னைக்குச் சம்பளம் வாங்கி அதுல ஒரு ரூவாய நாஞ் செலவழிச்சிட்டம்னு எங்கய்யம் போட்டும் அடுச்சான்" என்று கூற்று வறுமையின் காரணமாகத் தலித் குழந்தைகள் தனக்கு விருப்பமானப் பொருள்களை வாங்கி உண்ணக்கூட முடியவில்லை என்ற யதார்த்தம் நாட்டில் நடக்கக்கூடிய அவல நிலையாகக் காட்டப்பட்டிருக்கிறது (Bama, 2022).

## உணவு

தலித் பெண்கள் தங்களின் வறுமைக் காரணமாக நல்ல உணவு சமைத்து சாப்பிடுவதில்லை. தங்கள் வீடுகளில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளில்கூட அரிசிச்சோறு அவர்கள் அதிகம் உண்டதில்லை. சத்தான உணவுகூட இவர்களுக்கு கிடைப்பதில்லை. இதனைப் பாமா, தேவி என்ற துணை பாத்திரப்படைப்பு மூலம் குறிப்பிடுகையில், "ஏம்மா ரவைக்காச்சும் அரிசி வாங்கிச் சோறாக்கலாம்லம்மா பகலைக்குக் கேப்பக்கூழு, ரவைக்கும் கேப்பக்களி சீன்னு வருது ஒனியோட" என்று ஆசிரியர் அச்சமூகத்தில் மக்கள் நல்ல உணவுக்கூட சாப்பிடுவதில்லை என்பதை வருத்தத்தோடு பதிவு

செய்வதோடு கேப்பக்களி என்பது ஒரு சாதியின் அடையாள உணவாக மாறிவிட்டது என்பதை அறியமுடிகிறது (Bama, 2022). இதனையே, மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரத்தில்' வரும் சிறுகுலம் சீதாபதி அய்யர் பாத்திரப்படைப்பின் மூலம் "தன் மைத்துனர் அய்யாவுக்கு அவர் எழுதிய கடிதத்தில் இங்கு நான் நம் ஊரில் பள்ளர், பறையர், சாப்பிடும் கேழ்வரகுக் களியை உண்டு வருகிறேன்" என்பது தலித்துகளின் உணவுப் பண்பாடும் கீழ்மையாக உள்ளதாகச் சித்திரிக்க அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளது (Selvakumar, 2018).

## கல்வி

கல்வியறிவு சமூக மாற்றத்திற்கு அடிப்படை ஆகும். எனவே தலித் மக்களின் விடுதலையில் கல்வியறிவு முதலிடத்தை வகிக்கிறது. காலங்காலமாக அறியாமையால் வாழ்ந்த தலித் பெண்கள் ஒடுக்குதலுக்கு ஆளானதும், அடிமையாக வாழ்வதும் கல்வியறிவின்மையால்தான். பொருளாதாரப் பிரச்சினையால் போதிய கல்வி அறிவு கிடைப்பதில்லை. இதனால் இப்பெண்கள் வீட்டு வேலைக்கும், வயல் வேலைக்கும், தொழிற்சாலைக்கும் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனை, "வகுத்துப் பாட்டுக்கே பெரும்பாடா இருக்கையில் எங்கு கூடிப் படிக்க முடியும்" என்றும், "ஆம்பளப் பெயல்க கொஞ்ச நாளைக்கு பள்ளிக்கூடம் போயிட்டு பிறகு நின்னுடுவான்க; பொட்டசிக அதுதானும் போகமாட்டாக, வீட்ல பிள்ள எடுத்துக்கிட்டு வீட்டுச் சோலிக பார்க்கவே அதுகளுக்குச் சரியாகிப் போகும்" என்று ஆசிரியர் பதிவுச் செய்துள்ளார் (Bama, 2022). ஒட்டுமொத்த தலித் பெண்களும் பல்வேறுப்பட்ட அடிமை சங்கலியிலிருந்து விடுபட வேண்டும் என்றால் கல்வி என்னும் கருவி அவசியம் என்பதை பாமா தனது மனக்குமறலாகச் சுட்டிக்காட்டுகிறார்.

## உடை

மனிதர்கள் மானத்தோடு வாழ மிக அவசியம் என்று கருதப்படுவது உடையே ஆகும். ஒரு குடும்பத்தில் வறுமையின் காரணமாக இருக்க இடம், உடுக்க உடை, உணவு சரியாகக் கிடைப்பதில்லை. தலித் மக்களிடையே நிலவக்கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளால் தலித் பெண்கள் சரியான உடைக்கூட உடுத்தமுடியவில்லை. அவர்கள் அரை நிர்வாணமாகக் காட்சியளிக்கின்றனர். இச்சமூகச் சூழலை, "நாயக்கமாரு தெருவுல ஒரு அம்மா பழைய கெவுனு குடுத்தாக அதப் போடவும் சூப்பரா இருக்கா பெரியம்மா" என்று மையக்கண்ணி பாத்திரப்படைப்பு மூலம் வறுமை நிலையால் நல்ல உடைக்கூட வாங்கி உடுத்தமுடியாமல் பிறரிடம் வாங்கி உடுத்தும் நிலை உள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும், "அம்மாக்காமாருலெல்லாம் மேகலக்குடிச் சனங்க அவங்களைப் பாத்தீன்னா ஒவ்வொருத்தரும் மகாலெட்சுமி கெணக்கா இருப்பாக, அவுக தலைல எப்பப் பாத்தாலும் எண்ணெயும் பூவும் வாடாம இருக்கும். நம் மளக்கெணக்கா நாயித்துக் கெழம இத்தினிக்கானு தேங்கா எண்ண வாங்கி தேய்க்க மாட்டாக" என்று தலித் பெண்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையில் பொருளாதாரப் பிரச்சினையால் ஏற்படும் அவல நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் (Bama, 2022).

## திருமணம்

தொல்காப்பியம், பொருளதிகாரப் பகுதியில் உள்ள கற்பியலில் திருமணம் தொடர்பான பல செய்திகளை கொண்டுள்ளது.

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரிய மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்

கொள்பதுவே"

என்று ஒத்த குலத்தில் பிறந்தவர்களே காமம் நுகர தகுதி வாய்ந்தவர்களாகக் கூறுகிறது (Gowmarieswari, 1986). அதன் அடிப்படையிலேயே திருமண நிகழ்வு நடைபெறுகிறது. இன்று திருமண நிகழ்வு என்பது ஒரு ஆடம்பர விழாவாக நடைபெறுகிறது. தலித் மக்களிடையே நடைபெற்ற திருமணம் வறுமையின் காரணமாக நல்ல அரிசி கொண்டுகூட சமைக்க முடியாத நிலை இருந்ததை வெள்ளையம்மா பாட்டி பேசுவதாக, "எம்மா ஒங்கலியாணத்துல புல்லரிசிச் சோறுதான் போட்டாகளாமுல்ல பாட்டி சொன்னா, ஆம்மா இத்தினிக்கானு வெளக்கமாத்தையும் சொளகையும் எடுத்துக்கிட்டுப் போய் எறும்புக் குழிகள் வெட்டி வெட்டி வெளக்கமாத்துள கூட்டி அள்ளிட்டு வருவோம். எறும்பு சேத்து வச்சு புல்லரிசியக் கொண்டாந்து சொந்தக்காரக வீடுகளுக்கு வீட்டுக்கு ஒரு ஆளுக்குச் சாப்பாடு கொடுத்தோம்" என பதிவுச் செய்கிறார். பஞ்சக் காலத்தில் தலித் பெண்களின் திருமணம் நடைபெற்றால் உறவினர்களுக்கு நல்ல அரிசிக்கூட வாங்க அவர்களிடம் வறுமை வாட்டி வதைத்ததால் சோறு இட எறும்புகள் சேர்த்து வைத்த புல்லரிசிக் கொண்டு திருமணத்திற்கு வந்தவர்களுக்கு சமைத்து வீட்டிற்கு ஒரு ஆளுக்கு உணவு வழங்கியுள்ளதை குறிப்பிடுகிறார் (Bama, 2022).

## பிள்ளைப்பேறு

நமது நாட்டில் அறிவியல் வளர்ச்சியால் இன்று குழந்தை பெறுதல் பெண்களுக்கு எந்த ஒரு சிக்கலும் இல்லை. ஆனாலும் பல கிராமங்களுக்கும் இன்றும் மருத்துவம் சென்று சேரவில்லை. வசதிப் படைத்தவர்கள் நகரத்தை நோக்கிச் சென்று மருத்துவரை அணுகி மருத்துவம் பெறுகிறார்கள். ஆனால் தலித் பெண்கள் தமது பொருளாதாரச் சூழ்நிலையால் குழந்தைப் பெறுவதில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மேலும் அப்பெண்கள் போதுமான மருத்துவ உதவி கிடைக்காமல் இறப்புக்கூட நிகழ்கிறது. இதனை, "பிள்ளை உண்டானா இப்படி இருக்கனும், அப்படி இருக்கனும், இந்த ஊசி போடனும், அது சாப்பிடனும், இது சாப்பிடனும் சொல்லிகிராக இப்ப. ஆனா எங்க பொம்பளைக வழக்கம் போல கூழுத்தன்னியக் குடிச்சுட்டு வேல வெட்டிக்குப் போயிட்டு வந்து பிள்ளையைப் பெத்துட்டு நாலஞ்சு நாள்ல மறுபடியும் வேலைக்கு ஓடனும். அப்படி ஓடுனாத்தான் கஞ்சி குடிக்க முடியும்" என்றும், வறுமை நிலையில் குழந்தைப்பெறும்போது மருத்துவமனைக்குக்கூட செல்ல வழியில்லாமல் வீட்டிலேயே சிலர் மருத்துவம் பார்த்துக் கொள்வதால் இறப்பு ஏற்படக் காரணமாக அமைகிறது. இதனை, "இப்படி வீட்லே பிரசவம் பார்த்துச் சரிவர பாக்காமெ எம்புட்டோ பேரு செத்துக்கூடப் போயிட்டாக" என்று தலித் பெண்கள் படும் வேதனையை ஆழமாகப் பதிவுச் செய்துள்ளார் (Bama, 2022).

## பாலியல் தொல்லை

தலித் பெண்கள் வறுமையின் காரணமாக வேலைக்குச் செல்லும் இடத்தில், முதலாளி முதலைகளும், மற்றவர்களும் பாலியல் ரீதியாக பல தொல்லைகள் கொடுப்பதை பாமா நமக்கு உணர்த்துகிறார். "வேற சாதி பொம்ளைகளத் தொட அச்சப்படுவானுக. ஏம்னா அவுககிட்ட சாதிப்பவுரு, பணம் எல்லாம் இருக்கு. நம்மகிட்ட என்ன இருக்கு. அவெந் தொட்டாலும் அவனப் பகைச்சுட்டு நிக்க முடியாதுல்ல, ஏம்னா அவெங்கிட்டத்தான திரும்பி நம்ம வேல வெட்டிக்குப் போயாகுனும். எம்புட்டு நாளைக்கு எதுத்துக்கிட்டு நிப்ப" எனத் தலித் பெண்கள் வறுமையின் காரணமாக அன்றாடம் ஒருவேளை உணவுக்காக, வேலைக்குப் போகும் இடத்தில் உடல் ரீதியாகவும், மொழி ரீதியாகவும் பாலியல் தொல்லை ஏற்படுவதை வெள்ளையம்மா பாத்திரத்தின் மூலம் பதிவு செய்கிறார் பாமா. மேலும் பூமணியின் 'பிறகு' என்ற நாவலில் அழகிரி எனும் பாத்திரப்படைப்பு மூலம் பாலியல் ரீதியான பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்றார். "உம்ம பொண்டாட்டி புள்ளையிட்ட சக்கலியப்பெய வந்து நோண்டிட்டா மயிராண்டிக்கு ரோசம் பொத்துக்கிட்டு வரும்" என்ற குரல் ஒட்டுமொத்த தலித்துகளின் எதிர்ப்புக் குரலுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது (Bama, 2022). இவ்வகையில் இந்நாவல் தலித் மக்களின் பொருளாதாரப் பாலியல் சுரண்டலை சாதியம் என்னும் வலைக்குள் வைத்து அதிகாரமாக எடுத்துக் கொள்ளப்படுவதை மெருகுடன் சொல்லுகிறது. தலித் பெண்களும் வேலைக்குச் செல்லும்

இடத்தில் பாலியல் ரீதியாக பல துன்பங்கள் நிகழ்வதை தலித் நாவல்கள் பல பதிவுச் செய்துள்ளதை அறியமுடிகிறது.

## முன்னுரை

இந்திய நாடு சுதந்திரம் பெற்று 75 ஆவது ஆண்டை நோக்கிச் செல்லும் இவ்வேளையில் பொருளாதார ஏற்றத்தாழ்வினால் தலித் பெண்களின் அன்றாட வாழ்க்கையில் அடையும் அவலங்கள் கணக்கில் அடங்காது. தலித் பெண்களுக்கு அன்றாடம் வாழ்வதற்கு தேவைப்படும் உணவு, உடை, உறைவிடமின்றி வீதிகளிலும், குடிசைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இச்செய்தியைப் பாமா குறிப்பிடுகையில் இதற்கு அடிப்படைக் காரணம் கல்வி. பொருளாதார ஏற்றத்தாழ்வினால் தலித் பெண்களுக்கு சரியான கல்வி கிடைப்பதில்லை. கல்வி கிடைத்துவிட்டால், தங்களை அடிமைப்படுத்தும் அனைத்திலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டு, எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும் என்ற மன உறுதி ஏற்படும். உழைப்புச் சுரண்டல், உழைப்புக்கேற்ற ஊதியம், பாலியல் வன்கொடுமை, உணவு, உடை, உறைவிடம் போன்ற நிலைகளை நிர்ணயம் செய்யும் பொருளாதாரத்தை முழுமையாகப் பெற்றால் தலித் பெண்களின் வாழ்க்கை எழுச்சிப் பெறும் என்பதை பாமா அழுத்தமாக இந்நாவலில் பதிவுச் செய்துள்ளார்.

## References

Bama, (2022) Sangathi, New Century Book House, Chennai, India.

Gowmarieswari, (1986) Tholkappiyam, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Rangammal, R., Vasuki, K. (2000) Penniya Anugumuraikalum ilakkiya panpadum, Arivu Pathippagam, Chennai, India.

Ravikumar, (1996) Dalit Vendharkal, Dhalit ilakkiyam, Pengal neerapirikai, Vidiyal Pathippagam, Chennai, India.

Selvakumar, H. (2018) Dalit ilakkiya Varalaru, Ethir Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License